# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்

# பாராளுமன்றம்

---

# 1982 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

---

*[1982, சனவரி மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

---

*1982, சனவரி மாதம் 22 ஆம் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.*

*விலை : சதம் 35* *தபாற் செலவு : சதம் 50*

1982 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம்

[1982, சனவரி மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச.வ.—ஒ. 30/81
1463

1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

சுருக்கப் பெயர்.

1. இச்சட்டம் 1982 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை (திருத்தச்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கச் சட்டத்தின் 6 ஆம் பிரிவைத் திருத்துதல்.

2. 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின், (இது இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 6 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அத்தேதிக்குப் பின்னர் அத்தகைய காணியில் சீர்திருத்தங்கள் எவையேனும் செய்யப்பட்டிருப்பின் அவை காரணமாக உறப்பட்ட நியாயமானதொரு தொகையினால் அதிகரித்தபின்னர்" என்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவனவற்றை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"அச்சந்தைப் பெறுமதிக்கும்—

(அ) காணி கொள்ளற் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கான காப்பு வாசகத்தின்கீழ் எக்காணி தொடர்பில் அல்லது அதனகத்துள்ள அக்கறை தொடர்பில் கட்டளையெதுவும் ஆக்கப்பட்டிருக்கவில்லையோ அவ்வேதேனும் காணியின் அல்லது அதனகத்துள்ள அக்கறையின் விடயத்தில், அச்சட்டத்தின் 7 ஆம் பிரிவின்கீழான அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியன்று அக்காணியின் அல்லது அதனகத்துள்ள அக்கறையின் சந்தைப் பெறுமதிக்கும்; அல்லது

(ஆ) காணி கொள்ளற் சட்டத்தின் 38 ஆம் பிரிவுக்கான காப்பு வாசகத்தின்கீழ் எக்காணி தொடர்பில் அல்லது அதனகத்துள்ள அக்கறை தொடர்பில் கட்டளையொன்று ஆக்கப்பட்டுள்ளதோ அவ்வேதேனும் காணியின் அல்லது அதனகத்துள்ள அக்கறையின் விடயத்தில், அத்தகைய கட்டளை வெளியிடப்பட்ட தேதியன்று அக்காணியின் அல்லது அதனகத்துள்ள அக்கறையின் சந்தைப் பெறுமதிக்கும்,

உள்ள வித்தியாசத்தின் ஐம்பது சதவீதத்தால் அதிகரித்தபின்னர்".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு, அப்பிரிவின் இறுதியில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன்மூலம் இத்தால் திருத்தப்படுகிறது :—

"(3) மோசடித் தடுப்புக் கட்டளைச்சட்டத்திலுள்ள எதுவும், அதிகாரசபையினால் அல்லது அதிகாரசபையின் சார்பில் (1) ஆம் உட்பிரிவின்கீழ் நிறைவேற்றப்பட்ட கையுதிர்ப்புச் சாதனம் எதற்கும் ஏற்புடையதாகாது.".

திருத்தங்கள் கடந்தகாலத்தையும் உள்ளடக்கிப் பயனுறுதல்.

4. இச்சட்டத்தின் முற்போந்த ஏற்பாடுகளினால் முதன்மைச் சட்டவாக்கத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள், 1979 ஏப்பிரல் 1 ஆம் தேதியன்று பயனுறுவதாக வந்துவிட்டனவாகக் கருதப்படுதல் வேண்டும்.